# 2019 பங்குனிமாத சங்கதின நற்செய்தி

## *2019 தவக்காலத்திற்கான முன்னுரை*

தவக்காலத்தில் கிறிஸ்துநாதருடைய பாலைவன வாழ்வு எமக்கு மறக்க முடியாது. பரிசுத்த ஆவியானவரே தான் கிறிஸ்துநாதரை பாலைவனத்திற்கு அழைத்து சென்றவர். பாலைவனத்தில் 40 நாட்கள் பூராக (40 நாட்கள் என்பது அடையாள மொழியில் நீண்டகாலமாகும்) கிறிஸ்துநாதரின் ஆசானாக இருந்தவர் பரிசுத்த ஆவியானவராகும். யோர்தான் நதியில் திருமுழுக்கோடு இயேசுஆண்டவர் அனுபவித்த மகா உன்னதராம் கடவுள் எனது அப்பா – தந்தை – அப்பா – அம்மா என உறுதியாக (ஸ்தீரமாக) உண்மையாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பாலைவன அனுபவம் பூராகவும் பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துஆண்டவருக்கு வழிகாட்டினார் என்பது வெள்ளிடை மலை.

இன்னுமொரு பக்கத்தில் பாவத்தின் விளைவான பசி – பாவத்தின் விளைவான தனிமை, பாவத்தின் விளைவான அன்பில்லாமை - இப்படியாக பாவத்தின் அனைத்து விளைவுகளும் அநீதி – அசாதாரணம் வேண்டாமை – தனித்தன்மை இவ்வனைத்திற்கும் இயேசு ஆண்டவர் விருப்போடு முகம் கொடுத்து அனுபவிக்கின்றார். பரிசுத்த ஆவியானவர் பாலைவனத்திற்கு எடுத்துச் சென்று மனிதரின் ஆழமான வேதனைகளுக்கு, மனித பிரச்சனைகளுக்கு, விசேடமாக அவரை உள்ளாக்கி (உட்படுத்தி) அனுபவிப்பதற்கு இடமளிக்கிறார். இந்த பிரச்சினைகள் மத்தியிலும் ஆழமான உள்ளார்ந்த தியானத்தோடு சாதாரண மனிதனை அடிமைப் படுத்தும் பிரச்சனைகள் மத்தியிலும் இறைவனுள் உள்ளாளமான விடுதலையை அவர் அனுபவிக்கின்றார். சர்வ வல்லப – மகா உன்னதராம் கடவுள் எனது அப்பா – தந்தை, அம்மா – அன்னை யெனவும் என்னுள் மகா உன்னதராம் கடவுள் புதியதொன்றை செய்யப் போகிறார், சாத்தானின் சோதனைகளுக்கு அளித்த பதில்களின் மூலமாக அவர் எப்படியானதொரு உள்ளான விடுதலையை அனுபவிப்பதற்கு ஆரம்பித்துள்ளார் என்பது புலனாகின்றது.

பாலைவனத்திலிருந்து வந்து இயேசு ஆண்டவர் நடந்து கொண்ட விதத்தை பார்க்கையில் அக்கணத்திலிருந்து அவர் பார்த்தது வளப்புத் தந்தையாம் சூசையப்பரையும் தனது தாயாகிய தேவ அம்மாவையும் அல்ல. அப்பா, தந்தை – அன்னையையே. அவர் தேவ அன்னை / தந்தையில் எவ்வளவு நிரம்பியிருந்தார் எனில் அவரைக் கொள்வதற்கு சமயப் பெரியோர்கள் காட்டிய பிரதானமான குற்றச்சாட்டு, கடவுளைப் பழித்தார் என்பதாகும். நாம் பழைய ஏற்பாட்டைப் பார்க்கும் போது யூத மக்கள் சர்வ வல்லவராம் கடவுளை பெயர் சொல்லி அழைப்பதற்கு கூட அஞ்சினார்கள், எனப்படுகிறது. அவ்வளவுக்கு உன்னதராக வழிபட்டார்கள். அவர்கள் அவருக்குக் கூறிய பெயர் ''யாஹாவே'' அதாவது உச்சரிக்கக் கூட முடியாதவாறு (YHWH) அழைத்த அவரை, இயேசு ஆண்டவர் அப்பா – தந்தையே என்று அழைத்தது தான், இயேசு ஆண்டவரை யூத சமய அறிஞர்கள் கொல்வதற்கு இந்த அழைப்பு ஏதுவாக இருந்தது.

தவக்காலம் என்பது பாஸ்கா மறை இரகசியங்களை விழாக் கோலத்தோடு சிறப்பிப்பதற்கு ஆயத்தமாகும் காலமாகும். அதாவது கிறிஸ்துநாதரின் துன்புறுதல், மரணம், உயிப்பு. இயேசுக்கிறிஸ்துவாகிய இம்மனிதன் ஊடாக கடவுள் உலகத்தில் புத்தம் புதியதொரு செயலைச் செய்தார். முழு மனித குலத்திற்கும் புத்திரத்தன்மை உரித்தானது. இந்த சர்வ வல்லமையுள்ள கடவுளை அப்பா என்று அனுபவிப்பதற்கு திருச்சிலுவை யாகமே, எமக்கு பாக்கியமாக அமைந்தது. அவர் எமக்கு வெற்றியீட்டுக் கொடுத்த புத்திரத்தன்மையை எமது வாழ்வில் எவ்வளவு தூரம் அனுபவிக்கின்றோம். நன்றி உணர்ச்சியோடு இந்த மகா உரிமையை அனுபவிக்கின்றோமா? என்பதை திரும்பிப் பார்ப்பதற்காக இந்த 40 நாட்களை பாக்கியமாக அனுபவிப்போம்.

கிறிஸ்து நாதர் உண்மையான மனிதன் என்பதை நாம் ஒருநாளும் மறத்தலாகாது. துக்கம், வேதனை, நித்திரை, களைப்பு, பசி விளங்கிய மனிதனாவார். சாத்தான் அவரை சோதித்து இறைபுத்திரத்தன்மையை பறித்தெடுத்து மனித குலத்திற்கு ஏற்படப் போகும் மீட்பைத் தடுக்க உபாயம் தேடியது. உலகம், சரீரம், பசாசு ஆகிய மூவித சத்துராதிகள் கிறிஸ்துவை சோதித்தும்

அவர் பரிசுத்த ஆவியானவருக்கு உள்ளாகி, உண்மையான மனித மகனாக பதிலளிக்கும் விதத்தை பார்ப்பது அவசியமாகும். வல்லமையின் பேராசைக்கு – செல்வப் பெருமைக்கு – பெருந்தன்மையின் கா்வத்திற்கு உள்ளாகுவதற்கு அவருக்கு ஏற்பட்ட சோதனைகளை வெற்றி கொள்வதற்கு செபவாழ்வு, இறைவார்த்தை, பரிசுத்த ஆவியானவருக்கு விழிப்புறுதல் ஆகியன இவருக்குக் கேடயமாகியது என்பதை இயேசுவின் செயல்களின் நிமித்தம் நமக்குத் தியானிக்கக் கூடியதாக உள்ளது. இந்த சகல விதமான தடைகள், சோதனைகள் மத்தியில் அவர் இறைதந்தையின் இறைஅன்னையின் பிரியமான மகனாக சாட்சி பகா்ந்தார். உண்மையான சுவிசேசா்கள் கிறிஸ்துநாதா் முகம் கொடுத்த சோதனைகள், பாலைநிலத்தில் 40 நாட்களினுள் எடுத்தியம்பினும் அவர் வாழ்வு முழுவதும் இதனூடாகவே பயணித்தார். அவ்வனைத்து வேளைகளிலும் அவர் ஜெயம் கொண்டார் என்பதைக் காணலாம். சிலுவை மரத்திலும் சூழ நின்றவா்கள் அவருக்கு சவால் விட்டது ஏளனம் செய்தது நீா் இறமகன் என்றால் சிலுவையில் நின்று இறங்கி வாரும் என்றவாறாகும். இயேசுவுக்கு அப்படிச் செய்வதற்கு இயன்ற போதிலும் அவருக்கு கீழ்படிய வேண்டிய அவசியம் இருந்தது கடவுளுக்கு மாத்திரமேயாகும். கடவுளுக்கு இயேசுஆண்டவர் எவ்வளவு வசீகரமாகியிருந்தாரெனில் சிலுவையில் தொங்கிக் கடைசி கணம் வரையும் அப்பா தந்தைக்கு பட்சமாகவே இருந்தார்.

அப்படியாயின் இத்தவக்காலத்தில் மகா உன்னதமானவருக்கு நாமும் அப்பா தந்தையே – அப்பா அன்னையே என்று விழிப்புறுவதற்கு அவரது புத்திரத்தன்மை உள்ளாக வேண்டும். மகன் என்றால் அவரது வார்த்தைக்கு ஆழமாக விழிப்புற வேண்டும், பட்சமாக வேண்டும். எமது இறைவனாம் இறைபுத்திரரோடு ஒன்றுபட்டு சாத்தானின் வல்லமையை தோற்கடிக்க வேண்டும். வல்லமைக்கு – செல்வத்திற்கு – மானத்திற்கு – உள்ள பேராசையை வேரூன்றிய பாவங்கள், உள்மனக்காயங்கள், அடிமைப்பட்டுள்ள பழக்கவழக்கங்கள், அனைத்தையும் வெற்றி கொள்வதற்கு பாவத்தின் பாரதூரத்தை கண்டுணா்ந்து கொள்வதும் இயேசு ஆண்டவரின் மீட்பின் வல்லமைக்கு உளம் திறப்பதும் நடந்தாக வேண்டும்.

அன்பார்ந்தவா்களே ! தவக்காலத்தில் எம்மை திருச்சபைத் தாயானவள் அழைக்கிறார். பழையனவற்றை களைந்து கிறிஸ்துவினுள் புதியதொரு வாழ்வுக்கு உட்புகுவது அதை நாம் எவ்வளவு தூரம் நோக்கி உறுதி செய்தாலும் எமக்குத் தெரியும் அதை எமக்குச் செய்ய முடியாதென்று. சில சமயங்களில் தீா்மானத்திற்கு மேல் தீா்மானம் எடுப்போம். ஆனாலும் எமக்குத் தெரியும் நாம் விழுகிறோமென்று எனவே ஒன்று நமக்கும் புரியும், கடைசியில் எம்மை விடுதலை செய்வது – நாம் வல்லமை அனுபவிப்பது பூரணமான வாழ்வு வாழ்வதற்கு கடவுள் எமக்குக் கிடைக்கும் பரிசு என்று. அந்தப் பரிசு எமக்குக் கிடைக்கிறது. ஆனால் அப்பரிசு எமக்கு சம்பூரணமாகக் கிடைப்பது:-

i. எமது ஆசை
ii. எமக்கு உள்ள ஒத்துழைப்பு
புனித பவுல் அடிகளாரைப் போல கிறிஸ்துநாதரை உரிமையாக்கிக் கொள்வதற்கு எமக்குள்ள இந்த மகா அபிலாசை – விருப்பத்தின் படியாகும்.

(1989 தவக்கால திங்கள் செய்தி – சுவாமிஅப்பா)

“எனது விருப்பம் என்னவென்றால் கிறிஸ்துநாதரை உரிமையாக்கிக் கொள்வதும் - அவரோடு ஒன்றித்ததுமாகும்”

எனவே இப்படியாக நாம் செய்ய முனைந்ததால் எமக்கும் அன்று யோர்தான் நதியில் இயேசு ஆண்டவருக்கு தந்தை கூறிய “நீா் எனது அன்பார்ந்த மகன் நான் உம்மில் பூரிப்படைகிறேன்” என்ற குரலொலி கேட்கும் பாக்கியம் கிடைக்கும்.
இந்த தவக்காலத்தில் இந்த உன்னதமான பாக்கியம் முழு புபுது மக்களுக்கும் கிடைக்கும் படியாக செபிப்போம்.

(4பேர் கொண்ட குழுவில் கலந்துரையாடவும்)

- இன்றைய தினம் எமக்குக் கிடைத்த நற்செய்தியினுள் பாலை நிலத்தில் 40 நாட்கள் பூராக இயேசுஆண்டவர் அனுபவித்த அனுபவங்களுக்கு உள்ளாகுவதற்கு வழிகாட்டியுள்ளன.
- பாலைநிலத்தில் 40 நாட்கள் பூராகவும் இறைவன் மனித மகனாக அனுபவித்தினை (ஆழமான தனிமை – முடியாமை – பசி) கடவுள் - தந்தையாகவும் - கடவுள் அன்னையாகவும் அனுபவித்தலாகும். நீங்களும் / நானும் திருமுழுக்கினூடாக இறைபுத்திரத்தன்மைக்கு அழைப்புப் பெற்றது கிறிஸ்துநாதரை பின்பற்றுவதற்காகும். எமது வாழ்வினுள் நாம் கிடக்கும் பாலைநில அனுபவங்களுள் கடவுள் நம்மோடு இருப்பதையும் - அவர் எமது தந்தை – அன்னையென்பதையும் அனுபவிக்கின்றோமா?
- பாலைநில அனுபவத்தில் நிரந்தரமாக பரிசுத்த ஆவியானவருக்கு தன்னை வழிநடத்துவதற்கு இடமளித்த இயேசுஆண்டவர் - ஆழமான அமைதினுள் பூரணமாக தந்தையால் போசிக்கப்பட்டவர். (தங்கி வாழ்ந்தார்.) தந்தையோடு ஆழமாக தொடர்பு கொண்டு – தந்தையானவர் செய்யப்போகும் புதிய செயலை ஒளியுடன் நோக்கிய வண்ணமாக இருந்தார். எமது வாழ்வில் நாம் நடக்கும், தனித்தன்மை – அமைதியின்மை வேதனைகளுள் தந்தையானவரில் விசவாசம் வைத்து அவரில் தங்கி வாழ்வதற்கு பரிசுத்த ஆவியானவருக்கு எம்முள் செயல்பட நாம் இடமளிக்கின்றோமா?
- இறைபுத்திரத்தன்மையை அனுபவிப்பதற்கு சவாலாகும் சகல வேளையிலும் கிறிஸ்தவைப் போல், இறைவனின் மகன் என்ற தோறனையில் சாட்சி பகர்வதற்கு புத்திரத்தன்மையின் அபிமானத்தோடு – பதிலளிப்பதற்கு – எம்முள் உள்ள விழிப்புணர்ச்சி எத்தகையது ?

நடைமுறைக்கு :-

- சப்தம் - கலவரம் - போன்ற நிலைகளிலும் ஆழமான அமைதிக்கு பயணிப்பதற்கு படியெடுப்போம்.
- உபவாசத்தோடு ஆழமான மனம் வருந்துதலுக்கு உள்ளாகுவோம்.
- ஆழமான செப வாழ்வினூடாக இறைவனிடம் நெருங்குவோம்.

உதாரணம் (எனது மணித்தியால) த்திற்கு அதிகமான நேரத்தைக் கொடுப்போம்.

- முடியுமான அனைத்து நேரங்களிலும் திவ்விய நற்கருணை நாதர் முன் தோன்றி நிற்போம்.
- முடியுமான எல்லா திருப்பலிப்பூசைக்கு சமூகமளிப்போம்.

உங்கள் அவதானத்திற்கு

2019 – பங்குனி மாதம் 3ம் திகதிக்கு முதல் சித்திரை மாதம் 22வரை புகழ்ச்சி கூட்ட நற்செய்திகளுக்காக தவக்கால தியானத்திற்குரித்தானவற்றை உபயோகப் படுத்தவும்.